www.LatestWalkin.com

# வி.ஏ.ஓ. தேர்வு மாதிரி வினாத்தாள் - 7
## (பொது அறிவு)

1. சமீபத்தில் ஊழல் குற்றச் சாட்டிற்காகக் கைது செய்யப்பட்ட முன்னாள் முதல்வர்
அ) சொராம் தங்கா ஆ) கெகாங் அபாங்
இ) பவன் குமார் சாம்லிங் இ) ஜார்ஜ் பெர்னாண்டஸ்

2. 'மை அதர் டாட்டர்ஸ்' (My other Daughters) என்ற நூலின் ஆசிரியர்
அ) சுர்ஜித் சிங் பர்னாலா ஆ) சென்னா ரெட்டி
இ) குஷ்வந்த் சிங் ஈ) அமர்த்யா சென்

3. இந்தியாவின் முதல் கடல்சார் பல்கலைக் கழகம் செயல்படத் தொடங்கிய மாநிலம்
அ) கோவா ஆ) மகாராஷ்டிரா
இ) தமிழ்நாடு ஈ) கேரளா

4. தமிழகத்தில் மருத்துவப் படிப்பு முதல் முறையாக தமிழில் அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு
அ) 2007-08 ஆ) 2008-09
இ) 2009-10 ஈ) 2010-11

5. தமிழகத்தில் 'ஸ்டேன்லி நீர்த்தேக்கம்' என்று அழைக்கப்படும் அணை
அ) சாத்தனூர் அணை ஆ) பூண்டி நீர்த்தேக்கம்
இ) மேட்டூர் அணை ஈ) பெரியார் அணை

6. தமிழகத்தின் தற்போதைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
அ) பொன்முடி ஆ) எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம்
இ) கீதா ஜீவன் ஈ) தங்கம் தென்னரசு

7. தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதி அதிக மழைபெறும் காலம்
அ) வடகிழக்கு பருவக்காற்று காலம்
ஆ) வசந்த காலம்
இ) தென்மேற்கு பருவக்காற்று காலம்
ஈ) குளிர்காலம்

8. தமிழின் முதல் பேசும் படம்
அ) ஆலம் ஆரா ஆ) காளிதாஸ்
இ) ஹரிதாஸ் ஈ) அன்னக்கிளி

9. சென்னைப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
அ) 1857 ஆ) 1867
இ) 1877 ஈ) 1887

10. 'பால பாரதி' என்ற இலக்கிய இதழை வெளியிட்டவர்
அ) வி.வி.எஸ்.ஐயர் ஆ) வ.உ.சி
இ) சுப்ரமணிய பாரதி ஈ) சுப்ரமணிய சிவா

11. இந்தியாவின் 'ஆரஞ்சு நகரம்' என்று அழைக்கப்படும் நகரம்
அ) ஜம்மு காஷ்மீர் ஆ) நாக்பூர்
இ) சிம்லா ஈ) கவுகாத்தி

12. ஆசியாவின் மிகப்பெரிய மர ஆலை உள்ள இடம்
அ) லட்சத்தீவுகள் ஆ) மேற்கு வங்காளம்
இ) சட்டீஸ்கர் ஈ) அந்தமான் நிக்கோபர் தீவுகள்

13. ஆப்ரிக்க யூனியன் அமைப்பின் தலைமையகம் உள்ள இடம்
அ) ஹராரே ஆ) நைரோபி
இ) அடிஸ் அபாபா ஈ) பிரிடோரியா

14. சர்வதேச மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படும் நாள்
அ) செப்டம்பர் 11 ஆ) நவம்பர் 14
இ) டிசம்பர் 10 ஈ) அக்டோபர் 24

15. சில்ப வேதம் என்பது
அ) கட்டடக் கலை ஆ) மருத்துவம்
இ) சண்டைப் பயிற்சி ஈ) பாடல் கலை

16. லோபமுத்திரா என்ற கல்வியிற் சிறந்த பெண்மணி வாழ்ந்த காலம்
அ) ரிக் வேத காலம் ஆ) பின் வேத காலம்
இ) சமண சமய காலம் ஈ) புத்த சமய காலம்

17. நாளந்தா பல்கலைக்கழகத்தைத் தொடங்கியவர்
அ) சமுத்திர குப்தர் ஆ) சந்திரகுப்தர்
இ) இரண்டாம் சந்திரகுப்தர் ஈ) குமார குப்தர்

18. அக்பரின் வருவாய்த்துறை அமைச்சராக சிறப்பாகப் பணியாற்றியவர்
அ) ராஜா தோடர்மால் ஆ) பீர்பால்
இ) தான்சேன் ஈ) ஷெர்ஆப்கன்

19. 1930ஆம் ஆண்டில் அடையாற்றில் ஒளவை இல்லத்தைத் தொடங்கியவர்
அ) அன்னிபெசண்ட் அம்மையார்
ஆ) டாக்டர் முத்துலட்சுமி
இ) கவிக்குயில் சரோஜினி
ஈ) மேடம் காமா

20. இந்தியாவின் மைய தீர்க்கக்கோடு
அ) $82^0 30^1$ கி ஆ) $82^0 30^1$ மே
இ) $80^0 32^1$ கி ஈ) $80^0 32^1$ மே

21. உலக நிலப்பரப்பு மொத்தம் எத்தனை நேர மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
அ) 29 ஆ) 20
இ) 24 ஈ) 18

22. உலகின் மிக ஆழமான பகுதியான மரியானா ஆழி (Mariana Trench) உள்ள பெருங்கடல்
அ) அட்லாண்டிக் பெருங்கடல் ஆ) பசிபிக் பெருங்கடல்
இ) தென் சீனப் பெருங்கடல் ஈ) இந்தியப் பெருங்கடல்

23. {2,4,5,6,8} என்ற புள்ளிவிவரத்தின் திட்ட விலக்கம்
அ) 2 ஆ) 5
இ) 6 ஈ) 8

24. மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தை நிறுவியவர்
அ) அசிம் பிரேம்ஜி ஆ) நாராயணமூர்த்தி
இ) வாரன் பஃபெ ஈ) பில் கேட்ஸ்

25. டெல்லியில் நடைபெறவுள்ள காமன்வெல்த் போட்டியின் சின்னம்
அ) ஷெரா ஆ) பேந்த்ரா
இ) பேவோ ஈ) பாரத்

26. கிரிக்கெட்டின் 'மைக்கேல் ஜோர்டான்' என்று லாராவைப் புகழ்ந்தவர்
அ) முத்தையா முரளிதரன் ஆ) ஷேன் வார்ன்
இ) பாரக் ஒபாமா ஈ) நெல்சன் மண்டேலா

www.LatestWalkin.com

www.LatestWalkin.com


27. இந்திய சினிமாத்துறையின் மிக உயர்ந்த விருதான தாதா சாகிப் பால்கே விருது - 2009ஆம் ஆண்டிற்காக வென்றவர்
அ) ஷியாம் பெனகல் ஆ) டி. ராமாநாயுடு
இ) சேகர் கபூர் ஈ) அடூர் கோபாலகிருஷ்ணன்

28. 7, 49, x, 2401 என்ற தொடரில் xன் மதிப்பு
அ) 70 ஆ) 163
இ) 343 ஈ) 1260

29. Aயிலிருந்து கிளம்பி Bக்கு 30 கி.மீ/மணி சராசரி வேகத்தில் சென்று 42 கி.மீ/மணி சராசரி வேகத்தில் திரும்பி Aக்கு வந்தடைந்தால், மொத்த சாராசரி வேகம்
அ) 35 கி.மீ/மணி ஆ) 36 கி.மீ/மணி
இ) 37.5. கி.மீ/மணி ஈ) 34.5 கி.மீ/மணி

30. பரவளையத்திற்கு வெளியில் உள்ள புள்ளியிலிருந்து பரவளையத்திற்கு வரையப்படும் செங்கோடுகளின் எண்ணிக்கை
அ) 1 ஆ) 2
இ) 3 ஈ) 4

31. இப்படத்தில் $\underline{/xpy} = 70^0$ எனில் $\underline{/xoy} = ?$




அ) $35^0$ ஆ) $70^0$
இ) $140^0$ ஈ) $180^0$

32. 20x + 27y = 289 எனில் x, yன் மதிப்பு
அ) x = 5, y = 7 ஆ) x = 5, x = 6
இ) x = 6, y = 8 ஈ) x = 7, y = 5

33. $\sqrt{0.0001}$ ன் மதிப்பு என்ன?
அ) 1 ஆ) 0.001
இ) 0.1 ஈ) 0.01

34. A, B, C யின் சராசரி 15, B, Cயின் சராசரி 16 எனில் Aயின் மதிப்பு
அ) 13 ஆ) 10
இ) 14 ஈ) 21.5

35. ராமன் மற்றும் லட்சுமணன் ஆகியோரின் வயதுகளின் வித்தியாசம் 20 வருடங்கள். ராமனின் வயது லட்சுமணனின் வயதைப்போல் 3 மடங்கு எனில் லட்சுமணனின் வயது என்ன?
அ) 10 ஆ) 12
இ) 14 ஈ) 15

36. ஒருவரிடம் 15 மாடுகள் இருந்தன. அவற்றுள் ஏழு நீங்கலாக மற்றவை இறந்துவிட்டன. மீதியிருப்பது எத்தனை?
அ) 8 ஆ) 6
இ) 7 ஈ) 9

37. 3 tan θ = 4 எனில் cosec θ ன் மதிப்பு என்ன?
அ) 4/5 ஆ) 5/4
இ) 3/4 ஈ) 4/5

38. மல்பெரித் தாவரங்களைப் பயிர் செய்வது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) செரிகல்சர் ஆ) ஏவிகல்சர்
இ) சில்வி கல்சர் ஈ) மோரிகல்சர்

39. ஓசோன் அடுக்கு காணப்படும் புவி அடுக்கு
அ) ட்ரோபோஸ்பியர் ஆ) அனிமோஸ்பியர்
இ) ஸ்ட்ரேடோஸ்பியர் ஈ) எக்ஸோஸ்பியர்

40. பூஞ்சைகளில் ஆண் பால் உறுப்பும், பெண்பால் உறுப்பும் ஒரே தால்லஸில் உருவாகும் அமைப்பு
அ) ஹோமோதாலிக் ஆ) ஹெட்டிரோதாலிக்
இ) டையேஷியஸ் ஈ) ஹோமோகார்பிக்

41. பிற தாவரங்களின் வளிமண்டல உறுப்பின்மீது தொற்றி ஒட்டி வாழும் தாவரத்திற்கு எடுத்துக்காட்டு
அ) ஹைடிரில்லா ஆ) வாலிஸ்நீரியா
இ) வாண்டா ஈ) ஈக்கோர்னியா

42. கரப்பான் பூச்சியின் கழிவுநீக்க உறுப்பு
அ) பெரிப்லினேட்டா ஆ) ரேமண்டா
இ) மால்பீஜியன் குழல்கள் ஈ) ஸ்டெர்னம்

43. தாவரத்தின் மலர்கள் மற்றும் கனிகளின் நிறங்களுக்குக் காரணமான கணிகம்
அ) குளோரோபிளாஸ்ட் ஆ) குரோமோபிளாஸ்ட்
இ) லியூக்கோபிளாஸ்ட் ஈ) மைட்டோகாண்டிரியா

44. 'காக்கேஸியன்கள்' என்று அழைக்கப்படுபவர்கள்
அ) வெள்ளை இனத்தவர்கள் ஆ) நீக்ரோக்கள்
இ) மங்கோலாய்டுகள் ஈ) சீன இனத்தவர்கள்

45. வைரஸ்கள் புகையிலைத் தாவரங்களைத் தாக்கி பல்வண்ண நோயினை உண்டாக்குகின்றன என்று கூறியவர்
அ) மோரிஸ் ஆ) ஸாஃபர்மேன்
இ) அடால்ஃப் மேயர் ஈ) லூவன் ஹூக்

46. Red Data Book என்பது
அ) அழிவுறும் விலங்குகளின் முழுமையான விவரங்கள் பற்றிய புத்தகம்
ஆ) அழிவுறும் தாவரங்களின் முழுமையான விவரங்கள் பற்றிய புத்தகம்
இ) அழிவுறும் காடுகளின் முழுமையான விவரங்கள் பற்றிய புத்தகம்
ஈ) அழிவுறும் நீர்வாழ் உயிர்களின் முழுமையான விவரங்கள் பற்றிய புத்தகம்

47. ஆல்காவும், பூஞ்சையும் சேர்ந்து தோற்றுவிக்கும் கூட்டு வாழ்த் தாவரம்
அ) மியூக்கர் ஆ) லைக்கன்
இ) போர்ஃபைரா ஈ) ம்யூக்கோ பெப்டைட்

48. 'வன விலங்கு வாரம்' எந்த ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகிறது?
அ) 1950 ஆ) 1952
இ) 1955 ஈ) 1960

49. 'காரன் ஸ்விஸ்' என்பது
அ) ஒட்டக இனம் ஆ) கோழி இனம்
இ) பசு இனம் ஈ) செம்மறியாட்டு இனம்

50. கண்ணில் லென்சிற்கும், விழித்திரைக்கும் இடையில் உள்ள கூழ்மப் பொருள்
அ) விட்ரியஸ் ஹ்யூமர் ஆ) அகுவஸ் ஹ்யூமர்
இ) மாக்குலா ஈ) லால்பிரிந்த் ஹ்யூமர்

51. திரள் கனிக்கு எடுத்துக்காட்டு
அ) அவரை ஆ) நெல்
இ) நுணாக் கனி ஈ) நெட்டிலிங்கம்

52. புவிப்பரப்பில் நடைபெறும் மொத்த ஒளிச்சேர்க்கையில் 50%க்கு மேல் எதன் மூலம் நடைபெறுகிறது?
அ) தாவரங்கள் ஆ) லைக்கன்கள்
இ) பைட்டோ பிளாங்டன் ஈ) குளோரெல்லா

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

53. 200 கி.கி. நிறையுள்ள பொருள் மீது செயல்பட்டு 2 மீ/வி² முடுக்கத்தை ஏற்படுத்தும் விசையின் அளவு என்ன?
அ) 200 நியூட்டன் ஆ) 400 நியூட்டன்
இ) 100 நியூட்டன் ஈ) 50 நியூட்டன்

54. ஒரு மின்சார பல்பின் இரு முனைகளோடு 30 வோல்ட் பாட்டரி இணைக்கப்பட்டுள்ளது. அதன் மின் தடை 10 ஓம். எனில் மின்னோட்டத்தின் அளவு என்ன?
அ) 30 வோல்ட் ஆ) 10 ஓம்
இ) 3 வோல்ட் ஈ) 3 ஆம்பியர்

55. இழுத்துக்கட்டப்பட்ட கம்பியின் இரண்டாவது அதிர்வு விதிகளின்படி இழுவிசை அதிகரிக்கும்போது கம்பியின் அதிர்வெண்
அ) அதிகரிக்கும்
ஆ) குறையும்
இ) முதலில் அதிகரித்து பின்னர் குறையும்
ஈ) மாறாது

56. கண் மருத்துவர்கள் விழித்திரையை ஆராய்வதற்குப் பயன்படுத்தும் கண் ஆய்வுக் கருவியில் பயன்படுத்தப்படும் ஆடி
அ) குவி ஆடி ஆ) குழி ஆடி
இ) கோளக ஆடி ஈ) சமதள ஆடி

57. காற்றாலைகளை இயக்கி மின்னாற்றல் உற்பத்தி செய்யப்படும் ஆரல்வாய்மொழி எந்த மாவட்டத்தில் உள்ளது?
அ) தூத்துக்குடி ஆ) நாகப்பட்டினம்
இ) திருநெல்வேலி ஈ) ஈ) கன்னியாகுமரி

58. இடப்பெயர்ச்சி - நேர வரைகோட்டின் சாய்வுப் பொருளின் எதனைக் குறிக்கிறது?
அ) முடுக்கம் ஆ) திசைவேகம்
இ) இடப்பெயர்ச்சி ஈ) விசை

59. தெளிவுறு காட்சியின் மீச்சிறு தொலைவு
அ) 25 செ.மீ ஆ) 25 மி.மீ
இ) 25 மீ ஈ) 2.5 செ.மீ

60. நெஸ்லர் காரணி என்பது
அ) பொட்டாசியம் ஹைட்ராக்சைடில் கரைக்கப்பட்ட மெர்க்குரிக் அயோடைடு
ஆ) பொட்டாசியம் ஹைட்ராக்சைடில் கரைக்கப்பட்ட மெர்க்குரிக் புரோமைடு
இ) பொட்டாசியம் அயோடைடில் கரைக்கப்பட்ட மெர்க்குரிக் அயோடைடு
ஈ) சோடியம் அயோடைடில் கரைக்கப்பட்ட மெர்க்குரிக் அயோடைடு

61. ஹேபர் முறையில் அம்மோனியா தயாரிக்கப்படும் முறையில் உயர்த்தியாகப் பயன்படுவது
அ) இரும்பு ஆ) ஹைட்ரஜன் பெராக்சைடு
இ) பொட்டாசியம் டை குரோமேட் ஈ) மாலிப்டினம்

62. 'கோபர் கேஸ்' என்றழைக்கப்படும் வாயு
அ) மீத்தேன் ஆ) ஈத்தேன்
இ) எத்திலீன் ஈ) அசிட்டிலீன்

63. சல்ஃபரின் அணுக்கட்டு எண்
அ) 8 ஆ) 1
இ) 4 ஈ) 2

64. எத்தனாலின் மோலார் நிறை
அ) 36 ஆ) 40
இ) 46 ஈ) 48

65. மாறா விகித விதியை வெளியிட்டவர்
அ) லவாய்சியர் ஆ) டடபிரௌஸ்ட்
இ) கேலுசாக் ஈ) கோல்ட்ஸ்டீன்

66. பித்த நீரில் உள்ள அமிலம்
அ) யூரிக் அமிலம் ஆ) ஸ்டியரிக் அமிலம்
இ) ஆக்ஸாலிக் அமிலம் ஈ) கோலிக் அமிலம்

67. மணல் என்பது
அ) $SiO_2$ ஆ) $H_2SiO_3$
இ) $SiO_3$ ஈ) $Na_2SiO_3$

68. சேர அரசர்களைப் பற்றிக் குறிப்பிடும் எட்டுத்தொகை நூல்
அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து
இ) நற்றிணை ஈ) பரிபாடல்

69. இந்தியாவின் புகழ்மிக்க மருத்துவரான சரகரை ஆதரித்த மன்னர்
அ) அசோகர் ஆ) சந்திரகுப்த மௌரியர்
இ) கனிஷ்கர் ஈ) ஹர்ஷர்

70. புத்தகயாவிற்கு அருகிலுள்ள பராபர் குன்றுகள் எந்தப் பேரரசின் கட்டிடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது?
அ) குப்தர்கள் ஆ) மௌரியர்கள்
இ) பல்லவர்கள் ஈ) குஷாணர்கள்

71. ரௌலட் சட்டத்தை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டத்தில் பஞ்சாபில் கைது செய்யப்பட்ட தலைவர்
அ) தாதாபாய் நௌரோஜி ஆ) சர்தார் வல்லபாய் படேல்
இ) மகாத்மா காந்தி ஈ) சாய்ப்தீன் கிச்லு

72. 'அது ஒரு படுகொலை, ஒரு கொலைக்களம்' என்று ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றிக் கூறியவர்
அ) சி.எப்.ஆண்ட்ரூஸ் ஆ) மகாதேவ தேசாய்
இ) ரவீந்திரநாத் தாகூர் ஈ) சி.ஆர்.தாஸ்

73. சரக்குகள் வளர்ந்து விரிவடைந்து பிரிமேடுகள் கத்தி போன்ற தோற்றத்தைப் பெறும் அமைப்பு
அ) டார்ன் ஆ) ஹார்ன்
இ) ஆரெட்டுகள் ஈ) மொரைன்கள்

74. பெருங்கடலில் ஆழம் திடீரென அதிகரிக்கும் பெருங்கடல் நிலத்தோற்றப் பகுதி
அ) கண்டத்திட்டு முடிவடையும் பகுதி
ஆ) கண்டச் சரிவு தொடங்கும் பகுதி
இ) கண்டச் சரிவு முடிவடையும் பகுதி
ஈ) பெருங்கடல் தாழ்ச்சி

75. இந்தியாவைப் புயல்கள் வழக்கமாகத் தாக்கும் காலம்
அ) ஏப்ரல்-மே மற்றும் அக்டோபர் - டிசம்பர்
ஆ) ஏப்ரல் - மே
இ) அக்டோபர் - டிசம்பர்
ஈ) ஜூன் - ஆகஸ்ட்

76. ஆஸ்திரேலியாவில் காணப்படும் புல்வெளி வகை
அ) ஸ்டெப்பி புல்வெளி ஆ) டவுன்ஸ் புல்வெளி
இ) பிரெய்ரி புல்வெளி ஈ) பாம்பாஸ் புல்வெளி

77. மக்கட்தொகைப் பரவலைக் காட்டப் பயன்படுத்தப்படும் முறை
அ) பட்டை விளக்கப்படமுறை ஆ) வட்டப் பகுப்புப் படமுறை
இ) வண்ணம் தீட்டும் முறை ஈ) புள்ளி முறை

78. 'இந்தியா மனித இனத்தின் தொட்டில்', 'மனிதப் பேச்சின் பிறப்பிடம்' என்று கூறியவர்
அ) மார்க் ட்வைன் ஆ) ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்
இ) ரொமைன் ரோலண்ட் ஈ) ஹூ சை

79. 14 வயதுக்குட்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்குத் தடை விதிக்கும் அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

அ) சட்டப் பிரிவு 39(F) ஆ) சட்டப் பிரிவு 17
இ) சட்டப் பிரிவு 24 ஈ) சட்டப் பிரிவு 19

80. இந்தியக் கப்பற்படை தினம் என்று கொண்டாடப்படுகிறது?
அ) அக்டோபர் 8 ஆ) டிசம்பர் 4
இ) ஜனவரி 24 ஈ) செப்டம்பர் 8

81. அடிப்படைக் கட்டமைப்பு வசதியை மேம்படுத்த உருவான கரும்பலகைத் திட்டம் எந்த ஆண்டு கல்விக் கொள்கையின் சிறப்பம்சம்?
அ) 1968 ஆ) 1986
இ) 1991 ஈ) 1992

82. ஒரு மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியிலிருக்கும்போது, அம்மாநிலத்தின் பட்ஜெட் எங்கு சமர்ப்பிக்கப்படுகிறது?
அ) லோக்சபாவில்
ஆ) ராஜ்ய சபாவில்
இ) அம்மாநிலத்தின் சட்டப்பேரவையில் மாநில கவர்னரால்
ஈ) அம்மாநில சட்ட மேலவையில்

83. நான்காவது எஸ்டேட் (Fourth Estate) என்னும் சொல் குறிப்பது எதனை?
அ) நாடாளுமன்றம் ஆ) உச்சநீதிமன்றம்
இ) பத்திரிகை ஈ) அம்பத்தூர் ரியல் எஸ்டேட்

84. நிதிக்குழுவை (Finance Commission) நியமிப்பது குறித்து குறிப்பிடும் அரசியலமைப்புச் சட்டப் பிரிவு
அ) சட்டப் பிரிவு 114 ஆ) சட்டப் பிரிவு 280
இ) சட்டப் பிரிவு 356 ஈ) சட்டப் பிரிவு 360

85. வாக்காளர் அடையாள அட்டையை அறிமுகப்படுத்திய தேர்தல் ஆணையர் யார்?
அ) சுகுமார் சென் ஆ) டி.என்.சேஷன்
இ) கோபால் சுவாமி ஈ) நவீன் சாவ்லா

86. அரசியலமைப்பு உருவாகும்போது இருந்த அடிப்படை உரிமைகளின் எண்ணிக்கை எத்தனை?
அ) நான்கு ஆ) ஐந்து
இ) ஆறு ஈ) ஏழு

87. லெவியாதன் (Leviyathan) என்னும் நூலின் ஆசிரியர்
அ) கார்ல் மார்க்ஸ் ஆ) ரூஸோ
இ) தாமஸ் ஹாப்ஸ் ஈ) பிரடெரிக் ஏங்கல்ஸ்

88. தாக்கர் கமிஷன் எதற்காக அமைக்கப்பட்டது?
அ) இந்திரா காந்தி கொலை பற்றி விசாரிக்க
ஆ) ராஜீவ் காந்தி கொலை பற்றி விசாரிக்க
இ) சுபாஷ் சந்திரபோஸின் நிலை பற்றி உறுதியான முடிவு எடுக்க
ஈ) போபர்ஸ் ஊழல் விவகாரம் குறித்து விசாரணை செய்ய

89. கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவம் நடைபெற்ற ஆண்டு
அ) 2001 ஆ) 2002
இ) 2003 ஈ) 2004

90. பிரதமர் பதவியைத் தக்க வைத்துக்கொள்ள பி.வி.நரசிம்மராவ் 1991ஆம் ஆண்டு எந்தத் தொகுதியில் போட்டியிட்டார்?
அ) நந்தியால் ஆ) அமேதி
இ) ராபெரேலி ஈ) ஹைதராபாத்

91. 'பூமி உருண்டை வடிவினாலானது. அது தன்னைத்தானே சுற்றிவருகிறது' என்று முதன்முதலில் அறிவித்தவர்
அ) வராஹமிகிரர் ஆ) பிரம்மகுப்தர்
இ) ஆர்யபட்டர் ஈ) அமரசிம்ஹர்

92. இந்தியாவில் மக்கள்தொகை முதன்முதலில் கணக்கெடுக்கப்பட்ட ஆண்டு
அ) 1871 ஆ) 1872
இ) 1881 ஈ) 1882

93. மக்கள் அடர்த்தி அதிகம் கொண்ட இந்திய மாநிலம்
அ) உத்தரப் பிரதேசம் ஆ) மத்தியப் பிரதேசம்
இ) டெல்லி ஈ) மேற்கு வங்காளம்

94. பிராந்திய கிராம வங்கி (Regioal Rural Bank) தொடங்கப்பட்ட வருடம்
அ) 1970 ஆ) 1955
இ) 1985 ஈ) 1975

95. பொருளியல் வாழ்க்கை என்பது மாற்றமும் முன்னேற்றமும் கொண்டது என்று கூறியவர்
அ) சும்பீட்டர் ஆ) ஜே.எம். கீன்ஸ்
இ) ஆல்பிரட் மார்ஷல் ஈ) மால்தஸ்

96. உலக மொத்த நிலப்பரப்பில் இந்தியாவின் பரப்பளவு எத்தனை சதவிகிதம்?
அ) 16.4% ஆ) 12%
இ) 2.4% ஈ) 3.6 %

97. மருத்துவத் துறையில் பயன்படும் MRI (Magnetic Resonance Imaging) ஸ்கேன் போன்றவற்றில் பயன்படுத்தக்கூடிய அதிவேக கடத்தும் திறனுள்ள மின்காகிதங்கள் தயாரிக்கப் பயன்படுவது
அ) ரேடான் ஆ) செனான்
இ) நியான் ஈ) ஹீலியம்

98. உலகின் மிகப்பெரிய தீபகற்ப நாடு
அ) சவுதி அரேபியா ஆ) இந்தியா
இ) அமெரிக்கா ஈ) இந்தோனேஷியா

99. சாய்கான் என்ற நகரத்தின் தற்போதையப் பெயர்
அ) ஹராரே ஆ) ஹோ-சி-மின் சிட்டி
இ) நைரோபி ஈ) இஸ்தான்புல்

100. மாருதி உத்யோக் பிரைவேட் லிமிடெட்டின் தலைமையகம் அமைந்துள்ள இடம்
அ) புனே ஆ) கொல்கத்தா
இ) மும்பை ஈ) குர்காவோன்

## விடைகள் :

1.ஆ), 2.அ), 3.இ), 4.ஆ), 5.இ), 6.ஈ), 7.அ), 8.ஆ), 9.அ), 10.அ), 11.ஆ), 12.ஈ), 13.இ), 14.இ), 15.அ), 16.அ), 17.ஈ), 18.அ), 19.ஆ), 20.அ), 21.இ), 22.ஆ), 23.அ), 24.ஈ), 25.அ), 26.இ), 27.ஆ), 28.இ), 29.அ), 30.ஆ), 31.இ), 32.அ), 33.ஈ), 34.அ), 35.அ), 36.இ), 37.ஆ), 38.ஈ), 39.இ), 40.அ), 41.இ), 42.இ), 43.ஆ), 44.அ), 45.இ), 46.அ), 47.ஆ), 48.இ), 49.இ), 50.அ), 51.ஈ), 52.இ), 53.ஆ), 54.ஈ), 55.அ), 56.ஆ), 57.ஈ), 58.ஆ), 59.அ), 60.இ), 61.ஈ), 62.அ), 63.அ), 64.இ), 65.ஆ), 66.ஈ), 67.அ), 68.ஆ), 69.இ), 70.ஆ), 71.ஈ), 72.அ), 73.இ), 74.இ), 75.அ), 76.ஆ), 77.ஈ), 78.அ), 79.இ), 80.ஆ), 81.ஈ), 82.அ), 83.இ), 84.ஆ), 85.ஆ), 86.ஈ), 87.இ), 88.ஈ), 89.ஆ), 90.அ), 91.இ), 92.ஆ), 93.ஈ), 94.ஈ), 95.அ), 96.இ), 97.ஈ), 98.அ), 99.ஆ), 100.ஈ).

www.LatestWalkin.com